தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு : 94436 99066

dinakani2023@gmail.com
www.dhinakani.com
நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்




மலர் : 02 | இதழ் :211 | 4 - பக்கம் | 27.02.2025 | வியாழன்கிழமை | விலை ரூ.6




**கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு**
**என்ஆற்றுங் கொல்லோ உலகு.**

விளக்கம்:
கைம்மாறு கருதி மழை பொழிவதில்லை; அந்த மழையைப் போன்றவர்கள் கைம்மாறு கருதி எந்த உதவியும் செய்பவர்கள் அல்லர்.

## வாரணாசியில் நாகா துறவிகளின் பிரம்மாண்ட ஊர்வலம் - காசி விஸ்வநாதர் கோயிலில் சிறப்பு பூஜை



புது டெல்லி : உத்தரப்பிரதேச மாநிலம் வாரணாசியில் நாகா துறவிகள் ஊர்வலம் நடத்தினர். மகா சிவராத்திரியை முன்னிட்டு காசி விஸ்வநாதர் கோயிலில் சிறப்பு பூஜை நடத்தினர். உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் 144 வருடங்களுக்கு பின் மகாகும்பமேளா நடைபெறுகிறது. இந்த விழா இங்குள்ள திரிவேணி சங்கமத்தின் கரைகளில் ஜனவரி 13ம் தேதி முதல் துவங்கியது. இதில் பவுசு பூர்ணிமா, மகர சங்கராந்தி, மவுனி அமாவசை, வசந்த் பஞ்சமி, மக் பூர்ணிமா, மகாசிவராத்திரி என மொத்தம் ஆறு வகையான ராஜகுளியல் நிகழ்ச்சி இடம்பெற்றது. இவற்றில் ஐந்தாவது புனிதக்குளியலான வசந்த் பஞ்சமி பிப்ரவரி 3 -ல் முடிந்தது. இதையடுத்து மகாகும்பமேளாவில் முகாமிட்டிருந்த 13 அகாடாக்களைச் சேர்ந்த பெரும்பாலானவர்கள் வராணாசிக்கு இடம்பெயர்ந்தனர். இந்த இடப்பெயர்வு, மகா கும்பமேளாவில் மட்டுமே நடைபெறும். இவ்வாறு இடம்பெயர்ந்தவர்கள் மகா கும்பமேளாவில் நடத்தியது போல், புதன்கிழமை காலை வாராணாசியில் மாபெரும் ஊர்வலம் நடத்தினர். ஜூனா அகாடா தலைமையில் மகா சிவராத்திரிக்காக, நாகா சாதுவினர் நடத்திய இந்த ஊர்வலம் பொதுமக்களை மிகவும் கவர்ந்தது. அதிகாலை 4 மணிக்கு அனைவரும் கங்கையில் புனிதக் குளியல் நடத்தினர். அதன்பிறகு துவங்கிய ஊர்வலத்தில், உடல் முழுவதிலும் சாம்பலைப் பூசி, நாகா சாதுக்கள் நிர்வாணமாக, தம் ஆயுதங்களை ஏந்தியபடி ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். கழுத்தில் சாமந்திபூ மற்றும் ரோஜா பூ மாலைகளுடன் அப்பகுதி முழுவதிலும் விபூதிகள் சூழ்ந்து பறந்தன. அவர்களது கைகளில் வாள், வேல், அம்பு, சூலாயுதம் மற்றும் குத்துவாள் என பலவகையான ஆயுதங்கள் இருந்தன. அவற்றை சுழற்றி வித்தைகளை செய்தபடி சென்ற நாகா சாதுக்களின் ஊர்வலம் பொதுமக்களை கவர்ந்தது. ஊர்வலத்தில், மேளங்களும், உறுமிகளும் விண்ணைப் பிளக்கும் ஓசையை கிளப்பின. 'ஹர ஹர மஹாதேவ்' என்று ஊர்வலத்தில் கலந்துகொண்ட துறவிகள் கோஷமிட்டனர். வாராணாசியின் ஹனுமர் காட்டில் துவங்கிய இந்த ஊர்வலம் கதவுலியாவழியாக, காசி விஸ்வநாதர் கோயிலில் நுழைந்தது. ஊர்வலத்தில் சில நாகா துறவிகள், ரதம் போல் அலங்கரிக்கப்பட்ட வாகனங்களிலும் வந்திருந்தனர். சிலர் வீரர்களைப் போல் குதிரைகளிலும் வாள்களை ஏந்தி வலம் வந்தனர். இந்த ஊர்வலத்துக்கு ஜூனா அகாடாவின் தலைவரான மகா மண்டலேஷ்வர் சுவாமி அவ்தேஷாணந்த் கிரி தலைமை தாங்கினார். வழக்கமாக இக்கோயிலின் முக்கிய வாயில் வழியாக துறவிகள் நுழைவது வழக்கம். இன்று அவர்கள் முக்கிய பிரமுரமுகர்கள் செல்லும் வாயில் எண் 4-ல் வழியே நுழைந்தனர். இந்த வாயிலை ஒட்டியே கியான்வாபி மசூதியும் அமைந்துள்ளது. இதனால், எந்த பதற்ற நிலையும் உருவாகாமல் இருப்பதை தவிர்க்கும் பொருட்டு வாராணாசி மாவட்ட நிர்வாகம் மற்றும் காவல்துறையின் உயர் அதிகாரிகள் அனைவரும் அப்பகுதியில் இருந்தனர். இந்த ஊர்வலம் தொடர்பாக அகாடாவினருடன் மாவட்ட ஆட்சியர் எஸ்.ராஜலிங்கம் முன்கூட்டியே பேச்சுவார்த்தை நடத்தி இருந்தார். அதன்படி இன்றைய ஊர்வலம் பிரச்சினைகள் எதுவும் இன்றி அமைதியாக முடிந்தது. சரியாக காலை ஏழு மணிக்கு அகாடா துறவிகள் காசி விஸ்வநாதருக்கு சிறப்பு பூஜை செய்து வழிபட்டனர். இந்த ஊர்வலத்தில் கலந்துகொள்வதற்காக நிர்வாணி அகாடாவின் தலைவரான மகா மண்டலேஷ்வர் கைலாசாணந்த் கிரியும் வாராணாசி வந்திருந்தார். இவரை, அகில இந்திய அகாடாக்கள் சபையின் தலைவரான மகா மண்டலேஷ்வர் ரவீந்திரா புரி முன்னின்று வரவேற்றார். அகாடா துறவிகளின் இந்த சடங்குகள் நாளை காலை 11 மணி வரை தொடர உள்ளது. இந்த சடங்குக்காக ஜூனா அகாடாவினர், காசி விஸ்வநாதர் கோயில் முழுவதையும் தங்களது கட்டுப்பாட்டுக்குள் எடுத்துள்ளனர்.

## மதுரை தமிழ்நாடு பாலிடெக்னிக் கல் பயன்ற முன்னாள் மாணவர்கள் சந்திப்பு கூட்டம்




மதுரை மாநகர் ராயல் கோர்ட் ஹோட்டலில் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு கூட்டம் நடைபெற்றது இதில் 1975-ம் ஆண்டு மதுரை தமிழ்நாடு பாலி டெக்கனிக் கில் பொறியாளராக பயின்ற 25 நபர்கள் சந்தித்து கோல்டன் ஜூப்ளி Class Re-union கொண்டாட்டமாக கொண்டாடப்பட்டது இவ்விழாவில் HOD (Civil) TNPT காலேஜ் ஓய்வு பெற்ற மரியாதைக்குரிய Er. சரவண மூர்த்தி, Retired Vice Principal TNPT காலேஜ் Er ராம சுப்ரமணியம், HOD Rtd (Civil) Er பழனிக்குமார் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பித்தனர் மேலும் இவ்விழாவில் ஒருவரை ஒருவர் பாசத்துடன் கட்டி அனைத்து தங்களது அனுபவங்களையும், இன்ப துன்பங்களையும் வாழ்க்கையில் எடுத்து கொண்ட முயற்சிகளையும் பரிமாறி கொண்டு சந்தோசம் அடைந்தனர் சசிகாந்த், , தாஸ் மற்றும் நண்பர்களும் உடன் இருந்தனர்

# தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் சார்பில் நலத்திட்ட உதவிகள் - முதல்வர் ஸ்டாலின் வழங்கல்



சென்னை: தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகளின் கீழ் 40 லட்சம் ரூபாய்க்கான நிதியுதவினை 45 கலைஞர்கள் மற்றும் மரபுரிமையினருக்கு தமிழக மு.க. ஸ்டாலின் வழங்கினார்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் இன்று (26.2.2025) தலைமைச் செயலகத்தில், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் கலைமாமணி விருது பெற்று நலிந்த நிலையில் வாழும் 10 கலைஞர்களுக்கு பொற்கிழியாக தலா 1 லட்சம் ரூபாய் நிதியுதவி, தமிழில் கருத்தாழமிக்க அரிய கலைகள் சார்ந்த நூல்களைப் பதிப்பிக்க 5 நூலாசிரியர்களுக்கு தலா 2 லட்சம் ரூபாய் நிதியுதவி, தமிழில் புதிய நாடகங்கள் தயாரித்து மேடையேற்றம் செய்ய5 நாடகக்கலைஞர்களுக்கு தலா 1.50 லட்சம் ரூபாய் நிதியுதவி, தமிழில் புதிய நாட்டிய நாடகங்களை தயாரித்து மேடையேற்றம் செய்ய 5 நாட்டியக் கலைஞர்களுக்கு தலா 1.50 லட்சம் ரூபாய் நிதியுதவி மற்றும் 20 மறைந்த கலைஞர்களின் மரபுரிமையினருக்கு குடும்பப் பராமரிப்பிற்காக தலா 25 ஆயிரம் ரூபாய் நிதியுதவி ஆகிய நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தமிழ்நாடு அரசால் 1955-ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் என்ற அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. இச்சங்கமானது, இயல் தமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் என்ற முத்தமிழுக்கும் பெருமை சேர்க்கும் விதத்தில், 1973-ஆம் ஆண்டில் அன்றைய முதல்வர் மு.கருணாநிதியால் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

கலை பண்பாட்டுத் துறையின் ஓர் அங்கமாகத் திகழும், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், தமிழ்நாடு அரசால் வழங்கப்படும் நிதியுதவியின் மூலம் தொன்மையான கலைகளை வளர்த்தல், அக்கலைகளில் ஈடுபட்டுள்ள கலைஞர்களை ஊக்குவித்தல், அழிந்துவரும் கலை வடிவங்களை ஆவணமாக்குதல், நாடகம், நாட்டிய நாடகங்களுக்கு புத்துயிர் அளித்தல், தமிழகப் பாரம்பரிய கிராமியக் கலைகளை வெளி மாநிலங்களிலும், உலகளவிலும் எடுத்துச் செல்லுதல், தமிழ்க் கலைகளின் வளர்ச்சிக்கு அளப்பரிய பங்களிப்பு அளிக்கும் கலைஞர்களுக்கு விருதுகள் வழங்குதல், நலிந்த நிலையிலுள்ள கலைஞர்களுக்கு மாதாந்திர நிதியுதவி வழங்குதல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

கலைமாமணி விருது பெற்று நலிந்த நிலையில் வாழும் 10 கலைஞர்களுக்கு பொற்கிழி வழங்குதல்: தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் சார்பில் கலைமாமணி விருது பெற்று நலிந்த நிலையில் வாழும் ஆச்சாள்புரம் எஸ். சின்னதம்பி, ஆக்காட்டி ஆறுமுகம், நெல்லை சுந்தரராஜன், மதுரை ஜி.எஸ். மணி, ஏ.என். பாக்கியலட்சுமி, சீதாலட்சுமி (எ) ஜி.எம். சித்திரைசெல்வி, வி. நாகு, பி. சீதாலட்சுமி, ஆர்.எஸ். ஜெயலதா, எஸ். ஆண்ட்ரூஸ் ஆகியோருக்கு பொற்கிழித் தொகையாக தலா 1 லட்சம் ரூபாய் வழங்கிடும் அடையாளமாக 6 கலைமாமணி விருதாளர்களுக்கு பொற்கிழிக்கான காசோலைகளை தமிழ்நாடு முதல்வர் வழங்கினார்.

தமிழில் கருத்தாழமிக்க அரிய கலைகள் சார்ந்த நூல்களைப் பதிப்பிக்க 5 நூலாசிரியர்களுக்கு நிதியுதவி வழங்குதல்: தமிழில் கருத்தாழமிக்க அரிய கலைகள் சார்ந்த நூல்களைப் பதிப்பிக்க சண்முக செல்வகணபதி, ப. ரங்கராஜ், வளப்பக்குடி வீரசங்கர், இரா. சீனிவாசன், செ. நடராஜன் ஆகிய 5 நூலாசிரியர்களுக்கு நிதியுதவி வழங்கிடும் அடையாளமாக 2 நூலாசிரியர்களுக்கு தலா 2 இலட்சம் ரூபாய் நிதியுதவிக்கான ஆணைகளை முதல்வர் வழங்கினார்.

தமிழில் புதிய நாடகங்கள் மற்றும் நாட்டிய நாடகங்கள் தயாரித்து மேடையேற்றம் செய்ய நிதியுதவி வழங்குதல்: தமிழில் புதிய நாடகங்கள் மற்றும் நாட்டிய நாடகங்கள் தயாரித்து மேடையேற்றம் செய்திட 5 நாடகக் கலைஞர்களுக்கும், 5 நாட்டியக் கலைஞர்களுக்கும் நிதியுதவி வழங்கிடும் அடையாளமாக 4 கலைஞர்களுக்கு தலா 1.50 லட்சம் ரூபாய் நிதியுதவிக்கான ஆணைகளை முதல்வர் வழங்கினார்.

மறைந்த கலைஞர்களின் மரபுரிமையினருக்கு குடும்பப் பராமரிப்பு நிதியுதவி வழங்குதல்: மறைந்த 20 கலைஞர்களின் மரபுரிமையினருக்கு குடும்பப் பராமரிப்பிற்காக தலா 25 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கிடும் அடையாளமாக 2 மரபுரிமையினருக்கு தலா 25 ஆயிரம் ரூபாய் நிதியுதவிக்கான காசோலைகளை முதல்வர் வழங்கினார்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் சார்பில் வழங்கப்படும் நலத்திட்ட உதவிகளின் கீழ் மொத்தம் 40 லட்சம் ரூபாய்க்கான நிதியுதவினை 45 கலைஞர்கள் மற்றும் மரபுரிமையினருக்கு தமிழக முதல்வரால் இன்றைய தினம் வழங்கப்பட்டது.

## விக்கிரவாண்டி அருகே கொத்தமங்கலத்தில் நீர்நிலை ஆக்கிரமிப்பு கண்டித்து மாவட்ட ஆட்சியரிடம் கிராம பொதுமக்கள் மனு



விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி வட்டம் திண்டிவனம் தாலுக்கா செ. கொத்தமங்கலம் கிராமத்தில் நீர்நிலை ஆக்கிரமிப்பு கண்டுகொள்ளாமல் இருக்கும் அதிகாரிகளை கண்டித்து மாவட்ட ஆட்சியரிடம் கிராம பொதுமக்கள் மனு அம்மனுவில் கூறியிருப்பதாவது செ. கொத்தமங்கலத்தில் ஆதிதிராவிட தாழ்த்தப்பட்டவர்களை அவமதித்து வரும் வகையில் பல ஆண்டு காலமாக நீர்நிலை ஏறி அருகாமையில் இருக்கும் நில உரிமையாளர்கள் பட்டா பெற்று அனுபவித்து வருவதுடன் அதில் இருக்கும் மரங்களை வெட்டி விற்பதும் ஏரியை மீன் குத்தகைக்கு ஆண்டுக்கு ஒரு முறை 300000க்கு ஏலம் விடுவதும் இதனை கேட்டால் தாழ்த்தப்பட்டவர் எங்களை அவமதித்து வருவதாக காலம் காலமாக எங்கள் கிராமத்தில் ஜாதி கலவரம் ஏற்படும் நிலை உள்ளதால் இதனைத் தவிர்க்க உடனடியாக மாவட்ட கலெக்டர் இதில் தலையிட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நடவடிக்கை எடுக்க வேண்டும் என அம்மணியில் கூறி இருந்தனர்

## நீலகிரி மாவட்டம் குன்னூரில் வழக்கறிஞர்கள் சட்ட திருத்த மசோதாவை திரும்பப் பெறக் கூறி மத்திய அரசை கண்டித்து வழக்கறிஞர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



மத்திய அரசு புதிதாக வழக்கறிஞர்கள் சட்ட திருத்த மசோதா ஒன்றினை அமலுக்கு கொண்டு வந்தது இதனைக் கண்டித்து தமிழகமெங்கும் வழக்கறிஞர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் இதனைத் தொடர்ந்து நீலகிரி மாவட்டம் குன்னூரில் உள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றம் முன் வழக்கறிஞர்கள் புதிய சட்ட திருத்த மசோதாவை மத்திய அரசு திரும்பப் பெற கூறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் மேலும் வரும் வெள்ளிக்கிழமை உண்ணாவிரத போராட்டம் நடத்தப் போவதாக வழக்கறிஞர் சங்கத்தினர் தெரிவித்தனர் இந்த ஆர்ப்பாட்டத்தில் சங்க தலைவர் ராமச்சந்திரன் செயலாளர் நாகதேவி துணைத் தலைவர் மனோஜ் குமார் இணைச் செயலாளர் முபாரக் அற்புதமணி மற்றும் வழக்கறிஞர்கள் கலந்து கொண்டனர்.

## அண்ணனின் வேலையை பறிக்க செட்டப் வீடியோ எடுத்த கில்லாடி தம்பி!



அண்ணன், அக்கா மற்றும் தங்கைக்கு சொத்தை கொடுக்காமல் நிலத்தை அபரிக்கும் நாடகம் அம்பலம்?

வடிவேல் ஒரு படத்தில் இரு சக்கரம் வாகனம் முன்பு விழுந்து ஒருவரிடம் நகை மற்றும் பணம் பறிப்பது போல் காமெடியை பார்த்துள்ளோம். அதேபோல் நேற்று முன்தினம் திருவள்ளூர் மாவட்டத்தில் சொத்தை அபகரிக்க அண்ணன் ஓட்டிச் சென்ற டிராக்டர் மீது ஓடி சென்று டிராக்டர் மீது ஏறி தனது மகனின் மூலம் வீடியோ எடுக்க சொல்லி தன்னை கொலை செய்வதாக நாடகமாடியது அம்பலமானது. திருவள்ளூர் மாவட்டம் செவ்வாபேட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பெருமாள் பட்டு பகுதி சேர்ந்தவர் வடிவேலன். இவருடைய அண்ணன் கிருஷ்ணமூர்த்தி வெள்ளவேடு காவல் நிலையத்தில் காவலராக பணிபுரிந்து வருகிறார். கிருஷ்ணமூர்த்திக்கு அக்கா, தங்கை மற்றும் ஒரு தம்பி என மொத்தம் நான்கு பேர் உள்ளனர். அக்கா மற்றும் தங்கைக்கு திருமணம் செய்து கொடுத்து விட்டோம் அதனால் அக்கா தங்கைக்கு சொத்து கொடுக்கக் கூடாது என்று உடன் பிறந்த தம்பி வடிவேலு அண்ணனிடம் சண்டை போட்டு உள்ளார். இந்நிலையில் காவலர் கிருஷ்ணமூர்த்தி தனது நிலத்தில் நாத்து நடுவதற்காக டிராக்டர் ஓட்டி செல்லும் பொழுது வடிவேலு என்பவர் தனது மகனிடம் செல்போனை கொடுத்துவிட்டு வீடியோ எடுக்கும்படி தெரிவித்துள்ளார். அண்ணன் ஓட்டி வந்த டிராக்டர் மீது ஓடி ஏறி கொலை செய்ய முயற்சி என்ற நாடகத்தை அரங்கேற்றம் செய்து அதை வீடியோ எடுத்து சமூக வலைதளத்தில் ஒளிபரப்பி உள்ளார். காவலர் கிருஷ்ணமூர்த்தியின் தாய் மற்றும் மனைவியை அண்ணி என்றும் பார்க்காமல் வடிவேலு மற்றும் அவருடைய மனைவி மற்றும் மனைவியுடைய அக்கா மூன்று பேரும் சேர்ந்து காவலரின் தாய் மற்றும் மனைவியை அடித்தும் தகாத வார்த்தைகளை பேசி மொத்த சொத்தையும் எனக்கு கொடுக்கவில்லை என்றால் உன்னையும் உனது குடும்பத்தையும் அழித்து விடுவேன் என்று கொலை மிரட்டலும் எடுத்துள்ளார் வடிவேலு. இவரது அண்ணன் கிருஷ்ணமூர்த்திக்கு அவப்பெயர் ஏற்படுத்தி அவரது வேலை போக வேண்டும் என்ற நோக்கத்துடன் வீடியோ எடுத்து சமூக வலைதளத்தில் பரப்பிய வடிவேலு மீது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கிராம மக்களின் வேண்டுகோள் விடுத்துள்ளனர். தனக்கு சொத்து முழுமையாக கிடைக்க வேண்டும் நற்பாசையில் ஒரு நல்ல மனிதரை பழிவாங்கும் துடிக்கும் இவர் ஒரு தம்பியா என ஊர் மக்கள் தலையில் அடித்துக் கொண்டனர்.

# நாகர்கோவிலில் நடைபெற்ற சாரண சாரணிய பேரணி

நாகர்கோவில் பிப் 27 கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழ்நாடு பாரத சாரண சாரணியம் சார்பாக நாகர்கோவில் கல்வி மாவட்டத்தின் சிந்தனை நாள் பேரணி கோட்டார் அருகே உள்ள டி. வி. டி, மேல் நிலைப்பள்ளியில்வைத்து தொடங்கி எஸ்.எல்.பி மேல்நிலைப் பள்ளியில் நிறைவுற்றது. இப்பேரணியில் சாரணியம் இயக்கத்தை சார்ந்த நிர்வாகிகள், ஆசிரிய பெருமக்கள்





,மாணவ மாணவிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இந்நிகழ்வில் மருத்துவர் தி.கோ.நாகேந்திரன்,சமூக சேவகர் பேரணியில் கலந்து கொண்டு சிறப்பித்தார். இப்பேரணி தொடக்கத்திலிருந்து நிறைவுறும் வரை போக்குவரத்து காவல்துறையினர் சிறப்பாக பணியாற்றினர், இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைநிர்வாகிகள் சிறப்பாக செய்திருந்தனர்.

# நாகர்கோவிலில் மனித பாதுகாப்பு கழக மாநாடு

நாகர்கோவில், பிப்.27 கன்னியாகுமரி மாவட்டம், மாத்தூர் தொட்டிப்பாலத்திற்கு காமராஜர்பெயர் சூட்ட வேண்டும் என்று நாகர்கோவிலில் நடைபெற்ற மனித பாதுகாப்பு கழக மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மனித பாதுகாப்பு கழக 7வது எழுச்சி மாநாடு பிப் 23, அன்று நாகர்கோவில் அண்ணா விளையாட்டரங்கம் முன்பு நடைபெற்றது. குமரி மாவட்ட செயலாளர் ஜாண் வின்செண்ட்ராஜ்தலைமை வகித்தார். மாநகர செயலாளர் ஜெகன், துணை செய லாளர் ஆன்றனி சதீஷ், சுதன், கழகபேச்சாளர் லாரன்ஸ், கொள்கை பரப்புசெயலாளர்அமலன் ,மாநில அமைப்பாளர் சார்லின்,மாவட்டதுணை செயலாளர் ஸ்டீபன், லாசர்,ஜெரோம்மகளிரணி பாத்திமாமேரி, டெல்லா மேரி லட்சுமி,அனிதா, பிரிசெல்லா,பேபிசாலினி ஆகியோர் முன்னிலை




வகித்தனர். பொதுசெயலாளர் வழக்கறிஞர் உஷாதுணை பொதுசெயலலாளர் ஜேசுதாஸ், திரைப்பட நடிகர்கள் கராத்தே ராஜா, நகைச்சுவை நடிகர் முத்து காளை ஆகியோர் கலந்து கொண்டனர். மாநாட்டில் மனித பாதுகாப்பு கழக நிறுவன தலைவர் டாக்டர் ஜெய் மோகன் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசினார். தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களில் இருந்தும், புதுவையில் இருந்தும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். மாநாட்டில் ஆசியாவில் மிகவும் உயரமான மற்றும் நீளமான மாத்தூர் தொட்டி பாலத்திற்கு காமராஜர் பெயர் சூட்டி பாலத்தில் பெயர் பொறிக்க வேண்டும். தமிழகத்தில் மது ஆலைகளை மூட வேண்டும். அரசு இலவசங்களை தவிர்த்து அன்றாட பொருட்கள் முதல் ஆபரண தங்கம் வரை விலையை குறைக்க வேண்டும். ஒன்றிய, மாநிலஅரசுகள்இணைந்து நடவடிக்கை மேற்கொண்டு, கன்னியாகுமரியில் விமான நிலையம் கொண்டு வரவேண் டும். திறமையான மாணவர்களை உருவாக்கும் வகையில் தமிழ்நாடு அரசு பள்ளிகளின் தரத்தை, தனியார் பள்ளி, கல்லூரிகளுக்கு நிகராக உயர்த்த வேண்டும். குமரியில் விளை நிலங்களை அழித்து பட்டா போடப்படுவதை தடுக்க வேண்டும். கள்ளில் கால்சியம், புரோட்டீன் மற்றும் ஊட்டசத்துக்கள் உள்ளது. எனவே, அரசு மக்கள் நலன் கருதி கள்ளுகடைகளை திறக்க வேண்டும் ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட் டன. மாநாட்டில் திரை நட்சத்திரங்கள் பங்கேற்ற கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

# மேட்டூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வேளாண் துறை சார்ந்த கோரிக்கை மனு: அமைச்சர், எம்.எல்.ஏ, வழங்கினார்

தமிழக வேளாண் மற்றும் உழவர் நலத்துறை சார்பாக வேளாண்மை தனி நிதிநிலை அறிக்கை 2025, 2026 ஆண்டிற்கான தயாரிப்பது குறித்து சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு, திருப்பூர், கோயம்புத்தூர், நாமக்கல் ,நீலகிரி மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட விவசாயிகளின் கருத்து கேட்கும் கூட்டம் சேலம் மாவட்டஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது இதில் சேலம் மேற்கு மாவட்ட பாமக செயலாளரும்,




மேட்டூர் சட்டமன்ற உறுப்பினருமான எஸ். சதாசிவம் எம்.எல்.ஏ, விவசாயிகளை கோரிக்கைகள் மற்றும் வேளாண்துறைநிதிநிலை அதிக நிதி ஒதுக்கீடு செய்வது குறித்து கருத்துகளை எடுத்து கூறினார். மேலும்மேட்டூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வேளாண் துறை சார்ந்த கோரிக்கை மனுக்களை மாண்புமிகு தமிழ்நாடு வேளாண்துறைஅமைச்சர் எம். ஆர். கே பன்னீர்செல்வம் அவர்களிடம் வழங்கினார்.

# பாமக கௌரவ தலைவர் ஜி.கே. மணியின் மைத்துனர் தன்ராஜின் மகன் சேது நாயக் திருமண விழாவில் தமிழக முதல்வர்,பிரபல அரசியல் கட்சி தலைவர்கள், பிரபல சினிமா நட்சத்திரங்கள் பங்கேற்பு

பாமக கட்சியின் கௌரவ தலைவர் ஜிகே மணி அவர்களின் மைத்துனர் தன்ராஜ் அவர்களின் மகன் Dr. சேதுநாயக் திருமண விழாவில் நேற்று நடைபெற்ற திருமண வரவேற்பில் தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின், ஓ. பன்னீர்செல்வம், பிரபல சினிமா நட்சத்திரங்களான இயக்குனர் சேரன் நடிகர் மற்றும்த. வெ. கதலைவர் தளபதி விஜயின் மகன் ஜேசன் சஞ்சய் சசிகுமார், விஜய்



சேதுபதி, சந்தானம் சூரி,ஐஸ்வர்யா ராஜேஷ் மற்றும் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான்மற்றும்பலசினிமா நட்சத்திரங்கள் கலந்து கொண்டனர் இன்று காலை நடைபெற்ற திருமணத்தை பாமக நிறுவனர் மருத்துவர் ஐயா ராமதாஸ், மற்றும் சின்ன ஐயா மருத்துவர். அன்புமணி ராமதாஸ் ஆகியர் திருமணத்தை நடத்தி வைக்க தமிழக அமைச்சர்கள் எம் ஆர் கே பன்னீர்செல்வம், ராஜேந்திரன் மற்றும், தமிழக அமைச்சர்கள் பாஜக தமிழக தலைவர் அண்ணாமலை மற்றும் பல்வேறு கடசி பிரமுகர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்

# காரைக்குடி மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் கிளையின் சார்பாக அரசு பள்ளி மாணவிகளுக்கு கல்வி உதவி தொகையை காரைக்குடி மாநகராட்சி மேயர் சே.முத்துத்துரை வழங்கினார்

காரைக்குடி. பிப்ரவரி.26.மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் ன் CSR (கார்ப்பரேட் சமூக பொருப்புணர்வு) நிகழ்ச்சி காரைக்குடி மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் கிளையின் சார்பாக காரைக்குடி அஜி மஹாலில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக திரு. சே. முத்துத்துரை (காரைக்குடி மாநகராட்சி மேயர்), கலந்து கொண்டு அரசுபள்ளிமாணவிகளின் நலனிற்காகவும் அவர்களின் கல்வி இன்னையும், வாழ்க்கை




தரத்தையும் உயர்த்துவதற்காக இன்று சிவகங்கை மாவட்டத்தில் உள்ள 13அரசுபள்ளிகளை சேர்ந்த 70 மாணவிகளுக்கு CSR (கார்ப்பரேட் சமூக பொருப்புணர்வு) மலபார் குழுமம்சார்பாகமொத்தம் சுமார் ரூபாய்.6,22,000/ (ஆறுஇலட்சத்துஇருபத்து இரண்டு ஆயிரம் ரூபாய்), மதிப்பிலான காசோலையை மாணவிகளுக்கு வழங்கினார்கள். திரு. முகமது அஷுர் (மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் காரைக்குடி கிளை தலைவர்), ஆகியோர் உடனிருந்தார். இவை தவிர மலபார் கோல்டு & டைமண்ட்ஸ் நிறுவனத்தின் வெற்றிகரமான வணிகத்திற்கு அதன் சமூகப்பொறுப்பு முன் முயற்சிகள் இதரகாரணங்கள் ஆகும். தனது லாபத்தில் குறிப்பிட்ட சதவீதத்தை சுகாதாரம், கல்வி, வீட்டு வசதி, சுற்றுச்சுழல் பாதுகாப்பு, மற்றும் மகளிரை அதிகாரமயமாக்குதல் என சமூக பொறுப்பு திட்டங்களுக்கு செலவு செய்கிறது.

# திருப்பூர் புறநகர் மேற்கு மாவட்ட கழகம் பல்லடம் தொகுதி வீரபாண்டி கிழக்கு , மேற்கு பகுதி சார்பாக புரட்சித்தலைவி 77 பிறந்தநாள் விழா

மாண்புமிகு உடுமலை K.ராதாகிருஷ்ணன் B. Com.,M.L.A. வீட்டு வசதி, நகர்ப்புறவளர்ச்சிதுறை(ம) கால்நடைபராமரிப்புதுறை அமைச்சர், கழகஅமைப்புச் செயலாளர், திருப்பூர் புறநகர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் தலைமையில் M.S.M. ஆனந்தன் M.L.A., முன்னாள் அமைச்சர் ,கழக அமைப்புச் செயலாளர் அவர்களின்முன்னிலையில் கழக கொடியினை ஏற்றி வைத்து இனிப்புகள் வழங்கியும் நலத்திட்ட உதவிகள்(ம) அன்னதானம் வழங்கினார்கள்.



உடன் பல்லடம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு கரைப்புதூர்A. நடராஜன், பல்லடம் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் .K.P.பரமசிவம், வீரபாண்டி கிழக்கு பகுதி செயலாளர் பண்ணையார் பழனிச்சாமி, வீரபாண்டி மேற்கு பகுதி கழக செயலாளர் சுரேந்திரன், மாவட்ட அவைத் தலைவர் சிவாச்சலம், மாவட்டத் துணைச் செயலாளர் வெங்கடாசலபதி, பல்லட நகர கழக செயலாளர் ராமமூர்த்தி, ஒன்றிய கழகச் செயலாளர்கள் பழனிச்சாமி, சிவப்பிரகாசம், சார்பணி மாவட்ட கழக நிர்வாகிகள் புத்தரச்சல் பாபு, மோகன்ராஜ் , கோகுல், பரணி குமார், தண்ணீர் பந்தல் நடராஜன், மாவட்ட , நகரம்,ஒன்றிய, பகுதி , கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தார்கள்.

# முன்னாள் முதல்வர் ஜெ. ஜெயலலிதா 77வது பிறந்தநாள் விழா

செங்கல்பட்டு, பிப்.27 செங்கல்பட்டு மாவட்டம் மறைமலைநகரில் நகராட்சியில் புரட்சித்தலைவி முன்னாள் முதலமைச்சர் அம்மாவின் 77 ஆம் ஆண்டு பிறந்த நாளை முன்னிட்டு அதிமுகபொதுச்செயலாளர் வழிகாட்டுதலின் பேரில்செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழக செயலாளர் சிட்லப்பாக்கம் ராஜேந்திரன் மேற்பார்வையில் NH 3, 9 வது வார்டு கிளை கழக செயலாளர் சத்யராஜ் ஏற்பாட்டில் மக்கள் மனதில் வாழ்ந்து கொண்டிருக்கும் இதய தெய்வம் அம்மா திரு உருவப்படத்திற்கு மாலை அணிவித்தும், மலர் தூவியும், மரியாதை செலுத்தப் பட்டது. மேலும் இந்நிகழ்வு எம்.ஜி.கே.கோபி கண்ணன் மறைமலைநகர்





முன்னாள் நகர மன்ற தலைவர், செங்கல்பட்டு மேற்கு மாவட்ட அம்மா பேரவை செயலாளர் சிறப்பு அழைப் பாளராக கலந்து கொண்டு ஏழை எளியவர்களுக்கு இனிப்புகள் வழங்கியும், அன்னதானம் மற்றும் நல திட்ட உதவிகள் வழங்கி, நிகழ்ச்சிவெகுவிமர்சையாக நடைபெற்றது. மேலும் நிகழ்ச்சியின் எட்டாவது வார்டு நகரகழக செயலாளர் தசரதன், பிச்சிப்பிள்ளை , பாளையம் மற்றும் மகளிர் அணி முக்கிய நிர்வாகிகள், மேலும் இந்நிகழ்வு சிறப் பிக்கும் விதமாக மறைமலை நகராட்சி முக்கிய நகரக் கழக பொறுப்பாளர் கள், வட்டக் கழக பொறுப் பாளர்கள், நகர அமைப்பு சாரா அணி பொறுப்பாளர்கள், கட்சி உறுப்பினர் கள் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி மேலும் சிறப்பிக்கும் விதமாக பொதுமக்களும் மன நெகழ்ச்சியுடன் பெருந்திரளாக கலந்துகொண்டு புரட்சித்தலைவி அம்மாவின் பிறந்த நாள் விழா வெகு விமர்சையாக நடைபெற்றது.

# அமராவதி அணையில் இருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறப்பு

திருப்பூர், பிப்.27 அமராவதி அணையில் இருந்து பாசனத்துக்காக தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. இது குறித்து நீர்வளத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டு உள்ளதாவது: திருப்பூர் மாவட்டம், அமராவதி ஆற்றில் உள்ள முதல் 8 பழைய ராஜவாய்க்கால்களின் (ராமகுளம், கல்லாபுரம், குமரலிங்கம், சர்க்கார் கண்ணாடிபுத்தூர், சோழமாதேவி, கணியூர், கடத்தூர் மற்றும் காரத்தொழுவு) பாசனப்பகுதிகளுக்கு 25ந்தேதி (இன்று) முதல் மார்ச் 30ந் தேதி வரை இடைவெளிவிட்டு 21 நாட்களுக்கு அமராவதி ஆற்று மதகு வழியாக வினாடிக்கு 300 கனஅடி வீதம் 544.32 மில்லியன் கன அடிக்கு மிகாமல், தண்ணீர் திறந்து விட உத்தரவிடப்படுகிறது.

மேலும், அமராவதி புதிய பாசனப்பகுதிகளுக்கு 25ந்தேதி முதல் மார்ச் 20ந்தேதி வரை தகுந்தஇடைவெளிவிட்டு 10 நாட்களுக்கு அமராவதி பிரதானகால்வாய் வழியாக வினாடிக்கு 440 கன அடி வீதம் 380.16 மில்லியன் கன அடிக்கு மிகாமலும் ஆக மொத்தம் 924.48 மில்லியன் கன அடிக்கு மிகாமல் அமராவதி அணையிலிருந்துதண்ணீர் திறந்துவிட அரசு ஆணையிட்டு உள்ளது. இதனால், திருப்பூர் மாவட்டத்திலுள்ள 32 ஆயிரத்து 770 ஏக்கர் நிலங்கள் பாசன வசதிபெறும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.



உடுமலை சட்டமன்ற தொகுதி நிதியிலிருந்து . உடுமலை சட்டமன்றத்தொகுதி பொள்ளாச்சி தெற்கு ஊராட்சி ஒன்றியம், சிஞ்சுவாடி ஊராட்சியில் உடுமலை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில்ரூ.7.30 லட்சத்தில் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைக்கும் பணியும் பொள்ளாச்சி தெற்கு ஊராட்சி ஒன்றியம் தென்குமாரபாளையம் ஊராட்சியில் ஆதிதிராவிடர் காலணியில்ரூ.3.95, லட்சத்தில் கான்கிரீட் தளம் மற்றும் ரூ.2.77 லட்சத்தில் கான்கிரீட் சாலை வசதி அமைத்தல், தென் குமாரபாளையம் பொன்னே கவுண்டன் கிராமத்தில்ரூ.5 மதிப்பில் வடிகால் அமைத்தல் பணிகளுக்கான பூமி பூஜையில் கலந்து கொண்டார் முன்னாள் அமைச்சர் உடுமலை சட்ட மன்ற உறுப்பினர் உடுமலை ராதாகிருஷ்ணன் மற்றும் நிகழ்ச்சியில் அதிமுக முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ஜெயக்குமார், தென் குமாரபாளையம் கிளைச் செயலாளர் மயில்சாமி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் முரளி, கிளைச் செயலாளர் சரவணன்பிரபு, சோமசுந்தரம், மணி சார்புனி மாவட்ட , ஒன்றிய , கிளைக் கழக நிர்வாகிகள்(ம) பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# திருத்தணி முருகன் கோவில் உண்டியல் காணிக்கை ரூ. 1.59 கோடி

திருவள்ளூர் பிப்.27

அறுபடை வீடுகளில் ஒன்றாக திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி முருகன் கோவில் திகழ்கிறது. திருத்தணி முருகன் கோவிலுக்கு வரும் பக்தர்கள் உண்டியலில் காணிக்கையாக பணம், நகை ஆகியவற்றை செலுத்துகின்றனர். இந்த காணிக்கை அவ்வப்போது எண்ணப்பட்டு வருகிறது.

அந்தவகையில்திருத்தணிமுருகன்கோவில்உண்டியல் காணிக்கை நேற்று எண்ணப்பட்டது. இதில், கடந்த 28 நாட்களில் 1 கோடியே 59 லட்சரூபாய் பணம், 921 கிராம் தங்கம், 11 ஆயிரத்து 12 கிராம் வெள்ளி ஆகியவற்றை பக்தர்கள் காணிக்கையாக செலுத்தியுள்ளனர்.

# திருப்பத்தூர்: பள்ளி மாணவிகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்த ஆசிரியர் கைது



திருப்பத்தூர் பிப்.27 திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அருகே அரசு மேல்நிலைப்பள்ளி செயல்பட்டு வருகிறது . இந்த பள்ளியில் ஊத்தங்கரையை சேர்ந்த பிரபு என்பவர் தற்காலிக ஆங்கில ஆசிரியராக வேலை பார்த்து வந்தார்.

இந்த நிலையில், 7ம் வகுப்பு படிக்கும் 6 மாணவிகளுக்கு பிரபு பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். ஆசிரியரின் பாலியல் தொல்லையால் பாதிக்கப்பட்ட மாணவிகள், நேற்று குழந்தைகள்உதவிமற்றும் புகார் எண்ணுக்கு புகார் அளித்தனர்.

புகாரின் பேரில் திருப்பத்தூர் மாவட்ட குழந்தைகள்நலஅலுவலர் குழுவினர்சம்பவம்நடந்த அரசுப்பள்ளிக்கு சென்று சம்பந்தப்பட்ட மாணவிகளிடம் விசாரணை மேற்கொண்டனர். இதில், மாணவிகளுக்கு ஆசிரியர் பிரபு பாலியல் தொல்லை கொடுத்தது உறுதி செய்யப்பட்டது.

இது தொடர்பாக குழந்தைகள் நல அலுவலர்கள் போலீசில் புகார் அளித்தனர். இந்த புகாரின் அடிப்படையில் மாணவிகளிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்ட ஆசிரியர் பிரபு மீது போக்சோ உள்ளிட்ட 4 பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்த போலீசார், அவரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# பராமரிப்பு பணி: சென்னை மாநகராட்சியின் இணையவழி சேவைகள் நிறுத்தம்




சென்னை, பிப்.26

சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

சென்னை மாநகராட்சியின் இணையவழி சேவைகளில் பராமரிப்பு பணி நடைபெற உள்ளது.

எனவே, வரும் 28ந்தேதி (வெள்ளிக்கிழமை) இரவு 10 மணி முதல் மார்ச் மாதம் 2ந்தேதி (ஞாயிற்றுக்கிழமை) இரவு 10 மணி வரை சென்னைமாநகராட்சியின் இணையவழி சேவைகள் அனைத்தும் நிறுத்தப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜயுடன் பிரசாந்த் கிஷோர் சந்திப்பு



சென்னை, பிப்.27

தமிழக வெற்றிக்கழகத்தின் 2ம் ஆண்டு தொடக்க விழா மாமல்லபுரம் பூஞ்சேரியில் உள்ள சொகுசு விடுதியில் நாளை (26022025) காலை 7.45 மணிக்கு நடக்கிறது. விழுப்புரத்தில் நடந்த கட்சியின் முதல் மாநாட்டுக்கு பிறகு விஜய் பங்கேற்கும் கூட்டம் என்பதால் தொண்டர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளது.

இதனிடையே நாளை நடைபெறும் ஆண்டு விழாவில் த.வெ.க. தலைவர் விஜய் சில முக்கிய அறிவிப்புகளை வெளியிட உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. மேலும் இந்த கூட்டத்தில் 2026 சட்டசபை தேர்தல், கூட்டணி, கட்சியை பலப்படுத்த என்ன செய்ய வேண்டும்? என்பது தொடர்பாகதொண்டர்கள் மத்தியில் விஜய் பேச இருக்கிறார்.

இதற்கான ரகசிய ஆலோசனை கூட்டமாகத்தான் இந்த நிகழ்வுநடக்கஇருக்கிறது. கூட்டத்தில் தமிழக வெற்றிக்கழகத்துடன் தேர்தல் வியூக பணியில் கைகோர்த்துள்ள பிரசாந்த் கிஷோரும் பங்கேற்க இருக்கிறார். இதுதவிர தமிழக வெற்றிக்கழத்தின் அரசியல் ஆலோசனை குழுவில் உள்ள ஆதவ் அர்ஜூனா, ஜான் ஆரோக்கியசாமி ஆகியோரும் கலந்துகொள்கிறார்கள்.

அந்த வகையில் இந்த கூட்டம் முழுக்க, முழுக்க 2026 தேர்தல் வியூகத்தை மேற்கொள்வதற்கான கூட்டமாகவே அமைய இருக்கிறது. தற்போது வரை அறிவிக்கப்பட்டுள்ள 95 மாவட்ட செயலாளர்கள், துணை செயலாளர்கள், துணை தலைவர்கள், மாவட்ட பொறுப்பாளர்கள் என 600 பேர் கூட்டத்தில் பங்கேற்க இருக்கிறார்கள்.

நிர்வாகிகளுக்கு சட்டசபை தேர்தலை எதிர்கொள்வதற்கான பயிற்சியை பிரசாந்த் கிஷோர், ஆதவ்அர்ஜூனா, ஜான் ஆரோக்கியசாமி ஆகியோர் வழங்க இருக்கிறார்கள். மக்களை எவ்வாறு சந்திக்க வேண்டும், எதை முன்னிறுத்தி தேர்தல் பிரசாரம் மேற்கொள்ள வேண்டும், மற்ற கட்சிகளில் இருந்து வேறுபட்டு மக்கள்சேவை ஆற்றுவது குறித்து அவர்கள் பயிற்சி அளிக்கிறார்கள். அதன்பிறகு கட்சியின் தலைவர் விஜய் கூட்டத்தில் பேசுகிறார்.

இந்தநிலையில், சென்னை அடுத்த நீலாங்கரையில் உள்ள இல்லத்தில், த.வெ.க. தலைவர்விஜயை, தேர்தல் வியூக வகுப்பாளர் பிரசாந்த் கிஷோர் நேரில் சந்தித்தார். சந்திப்பின்போது நாளை (பிப்.26) நடக்கவிருக்கும் த.வெ.க. ஆண்டு விழாவில் என்ன மாதிரியான கருத்துகளை முன்வைப்பது என்பது குறித்து ஆலோசனை நடத்தியதாக தகவல் வெளியாகி உள்ளது.

விஜய் பிரசாந்த் கிஷோர் சந்திப்பின்போது என். ஆனந்த், ஆதவ்அர்ஜூனா, ஜான் ஆரோக்கியசாமி ஆகியோர் உடனிருந்தனர்

# சமத்துவம் இருக்கும் இடத்தைக் குலைப்பது எங்கள் வேலையல்ல: எம்.பி. சு.வெங்கடேசன்



மதுரை, பிப்.27

மதுரை எம்.பி. சு. வெங்கடேசன் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:

500 ரூபாய் நோட்டில் உள்ள இந்தியை அழியுங்கள் பார்ப்போம் என்று சவால்விடுகிறார் ஹெச். ராஜா.

ரூபாய் நோட்டில் 8 வது அட்டவணை மொழிகள் அனைத்தும் உண்டு.

சமத்துவம் இருக்கும் இடத்தை குலைப்பது எங்கள் வேலையல்ல.

காலில் குத்தும் முள்ளைதான் பிடுங்குவோம். அதுதான் அறிவுடமை.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசுத் துறைகளில் நியமிக்கப்பட்டுள்ள தற்காலிக பணியாளர்களை நீக்க வேண்டும்: ஐகோர்ட்டு உத்தரவு



சென்னை, பிப்.27

அரியலூர் மாவட்டத்தில் ஊரக வளர்ச்சித் துறையில் பணியாற்றி வருபவர் சத்யா. 1997 ம் ஆண்டு பணியில் சேர்ந்த இவர் பணி வரன்முறை செய்யக்கோரி சென்னையில் ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். இந்த வாழ்கை விசாரித்த சென்னை ஐகோர்ட்டு 12 வாரத்தில் பணி வரன்முறை செய்ய உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில் இந்த உத்தரவை எதிர்த்து ஊரக வளர்ச்சித்துறை சார்பில் சென்னை ஐகோர்ட்டில்ல் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மேல்முறையீட்டு வழக்கை விசாரித்த கோர்ட்டு, தற்காலிக அடிப்படையில் பணி நியமனங்கள் மேற்கொள்ளப்பட மாட்டாது என தலைமைச் செயலாளர் பிரமாண பத்திரம் தாக்கல் செய்ய உத்தரவிடப்பட்டது.

அதன் அடிப்படையில் இந்த வழக்கு நீதிபதி ஆர். சுப்பிரமணியன். ஜி. அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துத்துறையின் கூடுதல் செயலாளர் சார்பில் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

அந்த அறிக்கையில் தற்காலிக பணியாளர்கள் நியமனங்களை கைவிடுவதாக 2020ம் ஆண்டு 28ந் தேதி அரசாணை பிறப்பிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனை பதிவு செய்து கொண்ட நீதிபதிகள் அமர்வு, 2020ம் ஆண்டு நவம்பர் மாதத்திற்கு பின்னர் நியமிக்கப்பட்ட அனைத்து தற்காலிக பணியாளர்களும் பணியில் இருந்து விடுவிக்க வேண்டும் என உத்தரவிட்டது.

மேலும் தற்காலிக பணியாளர்கள் நியமனம் செய்வதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், அவ்வாறு யாரேனும் நியமிக்கப்பட்டிருந்தால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் மேல் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் நீதிபதிகள் அமர்வு தெரிவித்தது.

இந்நிலையில் தற்காலிக பணியாளர்களை நீக்கம் செய்வது மற்றும் ஒரு ஒழுங்கு நடவடிக்கை எடுப்பது குறித்து மார்ச் 17 ம் தேதிக்குள் அறிக்கை தாக்கல் செய்யக்கோரி தமிழக அரசுக்கு உத்தரவிட்ட நீதிபதிகள் அமர்வு, வழக்கு விசாரணையை மார்ச் 17ம் தேதிக்கு ஒத்தி வைத்தது.

# தென் மாநிலங்களின் குரலை நசுக்கத் திட்டமிடுகிறது மத்திய பாஜக அரசு கனிமொழி கருணாநிதி



சென்னை, பிப்.27

மக்கள் தொகை அடிப்படையில் தொகுதியை பிரித்தால், தமிழகத்தில் இருக்க கூடிய தொகுதிகளில் 8 தொகுதியை இழக்க கூடிய சூழல் ஏற்பட்டு இருக்கிறது. இது பற்றி விவாதிக்க, மார்ச் 5ல் அனைத்து கட்சி கூட்டம் நடைபெறும் என முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

இந்நிலையில், தொகுதி மறுசீரமைப்பு மூலமாக தென் மாநிலங்களின் குரலை மத்திய பாஜக அரசு நசுக்கத் திட்டமிடுகிறது என திமுக எம்.பி. கனிமொழி கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் தனது எக்ஸ் தள பதிவில்,

இந்தியாவின் அடிப்படை கூட்டாட்சித் தத்துவத்தைச்சிதைக்கும் நோக்கில் ஒவ்வொரு அடியையும்முன்னகர்த்தி வரும் பாஜகவின் நீண்ட கால செயல்திட்டம்தான் நாடாளுமன்றத் தொகுதிகளின் மறுசீரமைப்பு. பல ஆண்டுகளாக மக்கள்தொகையைக் கட்டுப்படுத்தி, மாநிலத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லும் தமிழ்நாடு உள்ளிட்ட தென் மாநிலங்களை வஞ்சிக்கும் வகையில், மக்கள்தொகை அடிப்படையில் தொகுதிகளை மறுசீரமைப்பு செய்து தென் மாநிலங்களின் குரலை நசுக்கத் திட்டமிடுகிறது ஆளும் மத்திய பாஜக அரசு. மத்திய அரசின் இந்த ஜனநாயகப் படுகொலையைஎதிர்த்து நமது முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களதுதலைமையில் ஒன்றிணைவோம் என பதிவிட்டுள்ளார்.

# காவல் நிலையத்தில் பெண் மானபங்கம்: 3 போலீசாருக்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனை விதிப்பு

திண்டுக்கல் பிப்.27

திண்டுக்கல் மாவட்டம் செம்பட்டி பகுதியில் கடந்த 2001ம் ஆண்டு திருட்டு வழக்கில் விசாரணைக்கு அழைத்துவரப்பட்ட பெண்ணை, அவரின் கணவரின் கண்முன்னே ஆடைகளைக் களைந்து மானபங்கம் செய்த வழக்கில், காவல் ஆய்வாளராக இருந்த ரங்கசாமி (77), காவலர்கள் வீர தேவர் (68), சின்ன தேவர் (69) ஆகிய மூவருக்கும் 10 ஆண்டுகள் சிறை தண்டனையும், ரூ.36,000 அபராதமும் விதித்து தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

முன்னதாக இந்த சம்பவத்தால் பாதிக்கப்பட்ட அந்த பெண் கிணற்றில் குதித்து தற்கொலைக்கு முயன்ற நிலையில், ஊர் மக்களால் மீட்கப்பட்டார். சில நாட்கள் கழித்து அப்பெண்ணின் கணவர் சக்திவேல் விஷம் அருந்தி தற்கொலை செய்தார். இதனை அடுத்து கோட்டாட்சியர் விசாரணை நடத்தி நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்திருந்தார்.

கடந்த 24 ஆண்டுகளாக நடந்த இந்த வழக்கில் திண்டுக்கல் முதன்மை அமர்வு நீதிமன்றம் இன்று தீர்ப்பு வழங்கி உள்ளது குறிப்பிடத்தக்கது.

# கோடநாடு வழக்கு: விசாரணைக்கு ஆஜராகுமாறு எஸ்டேட் மேலாளருக்கு மீண்டும் சம்மன்




நீலகிரி, பிப்.27

கோடநாடு கொலை, கொள்ளை வழக்கு தொடர்பான விசாரணை நீலகிரி மாவட்டம் ஊட்டியில்உள்ளமாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. கடந்த ஓராண்டுக்கும் மேலாக சி.பி.சி.ஐ.டி. இந்த வழக்கை விசாரித்து வந்தநிலையில், இதுவரை 245க்கும் மேற்பட்ட சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சூழலில் கோடநாடு கொலை, கொள்ளை வழக்கில் 3 காவலர்கள், ஆம்புலன்ஸ் ஓட்டுநர் உள்பட 5 பேருக்கு சி.பி.சி.ஐ.டி. நேற்று சம்மன் அனுப்பி இருந்தது. இதன்படி 3 காவலர்களும் கோவையில் உள்ள சி.பி.சி.ஐ.டி. அலுவலகத்தில் இன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு சம்மன் அனுப்பப்பட்டது. மேலும் கோத்தகிரி ஆம்புலன்ஸ் ஓட்டுநர் உள்ளிட்ட 2 பேர் வரும் 27ம் தேதி விசாரணைக்கு ஆஜராகுமாறு சி.பி.சி.ஐ.டி. சம்மன் அனுப்பி இருந்தது.

இந்நிலையில் கோடநாடு கொலை, கொள்ளை வழக்கில் விசாரணைக்கு ஆஜராகுமாறு எஸ்டேட் மேலாளர் நடராஜனுக்கு மீண்டும் சம்மன் அனுப்பப்பட்டுள்ளது. இதன்படி எஸ்டேட் மேலாளர்நடராஜன்வரும் 27ம் தேதி சி.பி.சி.ஐ.டி. முன்பு விசாரணைக்கு ஆஜராக உத்தரவிடப்பட்டுள்ளது.

முன்னதாக இவ்வழக்கில் சயானை கைது செய்த காவல் உதவி ஆய்வாளர் மகேஷ் குமாரிடம், கோவையில் இன்று விசாரணை நடத்தப்பட்டது. சயானின் செல்போனை பறிமுதல் செய்தபோது, அதனை ஏன் பதிவு செய்யவில்லை என்ற குற்றச்சாட்டில் விசாரணை நடைபெற்றதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிருஷ்ணகிரி: கெலவரப்பள்ளி நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் திறக்க உத்தரவு



கிருஷ்ணகிரி, பிப்.27

கெலவரப்பள்ளி நீர்த்தேக்கத்திலிருந்து நாளை முதல் தண்ணீர் திறந்துவிட தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில்,

கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர்வட்டம், கெலவரப்பள்ளி நீர்த்தேக்கத்தின் வலது மற்றும் இடதுபுறப் பாசன கால்வாய்களில் சுழற்சி முறையில் முதல் மண்டலத்திற்கு 5 நாட்களுக்கும் இரண்டாவது மண்டலத்திற்கு 5 நாட்களுக்கும் மொத்தம் 10 நாட்களுக்கு தண்ணீர் விட்டும், 5 நாட்களுக்கு தண்ணீர் நிறுத்தியும், தவணை ஒன்றுக்கு 72.60 மில்லியன் கன அடி வீதம் மொத்தம் 457.58 மில்லியன் கன அடி தண்ணீர்சுழற்சி முறையில் 6 தவணைகளாக 26.02.2025 முதல் 26.05.2025 வரை மொத்தம் 90 நாட்களுக்கு இரண்டாம் போக விவசாய பாசனத்திற்கு கெலவரப்பள்ளி நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் திறந்து விட அரசு ஆணையிட்டுள்ளது. இதன் மூலம் 8000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சோதனை அல்ல, ஆய்வு: மின்சார வாரியம் விளக்கம்

சென்னை, பிப்.27

தமிழ்நாடு மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில் வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருவதாக சமூக வலைதளங்களில் செய்திகள் வெளியாகின. இந்த நிலையில் இதற்கு மறுப்பு தெரிவித்து தமிழ்நாடு மின்சார வாரியம் வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில்,

தமிழ்நாடு மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில் வருமான வரித்துறை இணை ஆணையர் தலைமையில் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு விதமான செலவினங்களில் உரிய வருமான வரி பிடித்தம்(TDS)தொடர்பாக வழக்கமான சரிபார்ப்பு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது ஒரு வழக்கமான அலுவலக நடைமுறை ஆகும். ஆகவே தமிழ்நாடு மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில் எவ்வித வருமான வரி சோதனையும் நடைபெறவில்லை. வருமான வரி சோதனை என்ற செய்தி தவறானது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எங்களை ஏமாற்றினால் 2026 தேர்தலில் திமுக அரசு ஏமாந்து போகும்: ஜாக்டோ ஜியோ அமைப்பு எச்சரிக்கை



சென்னை, பிப்.27

தமிழகத்தில் பழைய ஓய்வூதிய திட்டத்தை மீண்டும் அமல்படுத்த வேண்டும், காலியாக உள்ள பணி இடங்களை நிரப்ப வேண்டும் என்பன உள்ளிட்ட 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி ஜாக்டோ ஜியோ கூட்டமைப்பினர் பல ஆண்டுகளாக போராடி வருகின்றனர்.

இந்தநிலையில், சென்னை எழிலகத்தில் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் தற்செயல் விடுப்பு எடுத்து இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது ஜாக்டோ ஜியோ ஒருங்கிணைப்பாளர்கள் மாயவன், காந்தி ராஜன், சுரேஷ், வெங்கடேசன், ஆகியோர் தலைமையில் கோரிக்கையை வலியுறுத்தி முழக்கமிட்டனர்.

பின்னர் அவர்கள் நிருபர்களிடம் கூறியதாவது:

கடந்த சட்டசபை தேர்தல் சமயத்தில் அரசு ஊழியர்களின் முக்கிய கோரிக்கையான பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்துவோம் என்று திமுக உறுதி அளித்தது. ஆனால் 4 ஆண்டுகள்ஆனநிலையில் இந்த கோரிக்கை இன்றுவரை நிறைவேற்றப்படவில்லை.

இன்று தமிழகம் முழுவதும் மறியல் போராட்டம் நடத்தப்போவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து, தமிழக அரசு நேற்றைய தினம் 4 அமைச்சர்கள் கொண்ட குழுவினர்ஜாக்டோஜியோ அமைப்பினருடன் 2 அரை மணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

அப்போது, எங்களின் வாழ்வாதார கோரிக்கையான பழைய ஓய்வூதிய திட்டத்தை அமல்படுத்த வலியுறுத்தினோம். கடந்த காலங்களில் நாங்கள் போராடும்போது எங்களின் தோள்மீது கைப்போட்டு கோரிக்கை நிறைவேற்றப்படும் என்று முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்து இருந்தார். ஆனால் இப்போது எங்களது கோரிக்கைக்கு மதிப்பளிக்கவில்லை. நேற்று மாலை முதல் அமைச்சர்மு.க.ஸ்டாலின் தலைமைச்செயலகம் வருகிறார். அவரிடம் பேசிவிட்டு கோரிக்கையை தெரிவிக்கிறோம் என்று அமைச்சர்கள் கூறினார்கள். அதேபோல் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் மற்றும் அமைச்சர்கள் வந்தார்கள். அமைச்சர்கள் எங்களை அழைத்துபேசுவார்கள் என்று நினைத்தோம் ஆனால் எங்களை அழைக்கவும் இல்லை, எங்களிடம் பேசவும் இல்லை. இதுபோன்ற மோசமான வஞ்சிக்கின்ற செயலை, நம்பிக்கை துரோக செயலை இந்தியாவிலேயே எந்த முதல் அமைச்சரும் செய்யவில்லை.

இந்தியாவிலேயே கொடுத்த வாக்குறுதியை 4 ஆண்டுகள் நிறைவேற்றாத ஒரே முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின். அவர் எங்களை உதாசீனம் செய்கிறார். எங்களை ஏமாற்றினால் நிச்சயமாக 2026ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் திமுக அரசு ஏமாந்து போகும். தமிழக அரசு 4 வாரம் எங்களிடம் அவகாசம் கேட்பது, எங்களை பிளவுபடுத்தி ஏமாற்றுவதற்காகத்தான். திமுக அரசு ஆட்சிக்கு வந்து 4 ஆண்டுகள் என்ன செய்தார்கள்? எங்களது ஆவேசம் போராட்டமாக வெடிக்கும்.

அப்போது யார் யார் தலை உருளும் என்று எங்களுக்கு தெரியாது. அடுத்தக்கட்ட போராட்டமாக முழுநேர வேலை நிறுத்த போராட்டம் நடத்துவது குறித்து எங்கள் சங்க நிர்வாகிகளுடன் கலந்தாலோசித்து முடிவெடுக்கப்படும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

தினகனி
Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253


# திருப்பூர்: கத்தியை காட்டி மிரட்டி தொடர் வழிப்பறியில் ஈடுபட்ட 3 பேர் கைது



திருப்பூர்: திருப்பூரில் பொதுமக்களிடம் கத்தியை காட்டி மிரட்டி தொடர் வழிப்பறியில் ஈடுபட்ட 3 பேரை போலீஸார் கைது செய்துள்ளனர். திருப்பூர் சந்திராபுரம் பகுதியை சேர்ந்தவர் வெங்கடேசன் (25). இவர் பனியன் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறார். இந்நிலையில், சந்திராபுரம் அம்மா உணவகம் அருகே நடந்து சென்றபோது, எதிர் திசையில் நடந்து வந்த 3 பேர், வெங்கடேசனிடம் கத்தியை காட்டி மிரட்டி அவரிடம் இருந்து அலைபேசி மற்றும் ரூ.2 ஆயிரத்தை பறித்துக்கொண்டு தப்பினர். இது குறித்து வெங்கடேசன் நல்லூர் போலீஸ் நிலையத்தில் அளித்த புகாரின் பேரில் வழக்குப் பதிவு செய்த போலீஸார், இது தொடர்பாக வழக்குப் பதிவு காவல் உதவி ஆணையர் விஜயலட்சுமி தலைமையிலான தனிப்படை போலீஸார், அய்யம்பாளையத்தை சேர்ந்த மணிகண்டன் (28), கல்லூரி சாலையை சேர்ந்த பாலாஜி சரவணன் (28) மற்றும் திருமுருகன்பூண்டியை சேர்ந்த ராம்குமார் (28) ஆகியோரை கைது செய்தனர். அவர்களிடம் தொடர்ந்து விசாரித்த போது மூன்று பேரும் பொதுமக்களிடம் கத்தியை காட்டி மிரட்டி பணம் செல்போன் பறிப்பதை தொடர்கதையாக வைத்திருப்பது தெரியவந்தது. இதையடுத்து, 3 பேரையும் திருப்பூர் சிறையில் அடைத்தனர். இதேபோல் மத்திய காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் பயங்கர ஆயுதங்கள் நேற்று (பிப்.25) இரவு கொள்ளையடிக்க திட்டமிட்டிருந்த 6 இளைஞர்கள் போலீஸாரால் கைது செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# மும்மொழி கொள்கையை எதிர்த்து மாணவர் அமைப்புகள் ஆர்ப்பாட்டம், பேரணி




சென்னை: மும்மொழி கொள்கைக்கு எதிராக தமிழகம் முழுவதும் மாணவர் இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பில் நேற்று ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. மாவட்டத் தலைநகரங்களில் மத்திய அரசு அலுவலகங்களை முற்றுகையிட்டும், பேரணி நடத்தியும் மாணவர் அமைப்புகள் கண்டனங்கள் தெரிவித்தன. இதன் ஒருபகுதியாக சென்னை ஆட்சியர் அலுவலகம் அருகில் நடந்த ஆர்ப்பாட்டத்துக்கு திமுக மாணவரணி மாநில துணைச் செயலாளர் அமுதரசன் தலைமை தாங்கினார். இதில் இந்திய மாணவர் சங்கம், மதிமுக மாணவரணி, திராவிட மாணவர் கழகம், சமூக நீதி மாணவர் இயக்கம், முற்போக்கு மாணவர் கழகம் உள்ளிட்ட அமைப்பினர் பங்கேற்று மும்மொழிக் கொள்கையை திணிக்கக் கூடாது, மத்திய அரசு நிதி வழங்க வேண்டும் என முழக்கமிட்டனர். முன்னதாக சைதாப்பேட்டையில் பஜார் சாலை, ஜோன்ஸ் சாலை வழியாக பேரணியாக சென்ற மாணவ அமைப்பினர், துணை தபால் நிலையத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர். அடையாறு பிஎஸ்என்எல் அலுவலகம், திருவொற்றியூர் தபால் நிலையம், தண்டையார்பேட்டை தபால் நிலையம் அருகிலும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

# தூத்துக்குடி - திருச்செந்தூர் சாலையை ரூ.22.40 கோடியில் சீரமைக்க விரைவில் பணிகள்!



தூத்துக்குடி: திருச்செந்தூர் கோயிலுக்கு வரும் பக்தர்களை பரிதவிக்க வைக்கும் வகையில் காணப்படும் தூத்துக்குடி - திருச்செந்தூர் சாலைக்கு விடிவு கிடைத்துள்ளது. ரூ.22.40 கோடியில் 17 கி.மீ. தொலைவுக்கு சாலையை சீரமைக்கும் பணி விரைவில் தொடங்கும் என தேசிய நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். திருச்செந்தூர் சாலை: தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள முக்கிய சாலைகளில் தூத்துக்குடி - திருச்செந்தூர் இடையேயான சாலையும் ஒன்றாகும். சுமார் 40 கி.மீ தூரம் கொண்ட இச்சாலை, கடந்த 2021-ம் ஆண்டு முதல் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது. இந்த சாலையில் தினமும் ஆயிரக்கணக்கான வாகனங்கள் பயணித்து வருகின்றனர். வட மாவட்டங்களில் இருந்தும், வட மாநிலங்களில் இருந்தும் திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலுக்கு வாகனங்களில் பக்தர்கள் இந்த சாலை வழியாக தான் வந்து செல்கின்றனர். மேலும், இந்த சாலையில் ஆறுமுகநேரி அருகே தாரங்கதார கெமிக்கல் தொழிற்சாலை, ஸ்பிக் நிறுவனம், மத்திய அரசின் கனநீர் தொழிற்சாலை, பழையகாயலில் அணுசக்தி துறைக்கு சொந்தமான ஜிர்கோனியம் தொழிற்சாலை போன்ற முக்கிய தொழிற்சாலைகள் அமைந்துள்ளன. பரிதாப நிலை: இதனால், இந்தச் சாலை எப்போதும் போக்குவரத்து நெரிசல் மிகுந்து காணப்படுகிறது. ஆனால், மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த இந்த சாலை கடந்த சில ஆண்டுகளாக முறையான பராமரிப்பு இல்லாமல் காணப்படுகிறது. மேலும், கடந்த 2023 டிசம்பரில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் சாலையின் பல இடங்களில் பெருத்த சேதம் ஏற்பட்டுள்ளது. சாலையில் ஆங்காங்கே பெரிய பள்ளங்கள் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக தூத்துக்குடி முதல் முக்காணி வரை சாலையின் நிலை மிகவும் பரிதாபகரமாக உள்ளது. சாலையில் உள்ள பள்ளங்களில் வாகனங்கள் விழுந்து தொடர் விபத்துக்கள் ஏற்பட்டு வருகின்றன. இரவு நேரங்களில் இந்த சாலையில் பயணிக்க முடியாமல் முருக பக்தர்கள், வாகன ஓட்டிகள் பரிதவித்து வருகின்றனர். இந்த சாலையை விரைவாக சீரமைக்க தேசிய நெடுஞ்சாலை ஆணையம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பக்தர்கள், சாலையோர கிராமங்களில் வாழும் மக்கள், வாகன ஓட்டிகள், சமூக செயல்பாட்டாளர்கள் என பல்வேறு தரப்பினரும் கடந்த 2 மாதங்களாக தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகின்றனர். விரைவில் சீரமைப்பு: இது தொடர்பாக 'இந்து தமிழ் திசை' நாளிதழிலும் இரண்டு முறை விரிவான செய்தி வெளியானது. இந்நிலையில் இந்த சாலைக்கு தற்போது விடிவு கிடைத்துள்ளது. முதல் கட்டமாக தூத்துக்குடி முதல் முக்காணி வரை 17 கி.மீ., தொலைவுக்கு சாலையை சீரமைக்க தேசிய நெடுஞ்சாலை ஆணையம் நடவடிக்கை எடுத்துள்ளது. இது குறித்து தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் கோட்ட பொறியாளர் சண்முகசுந்தரம் 'இந்துதமிழ் திசை' நாளிதழிடம் கூறுகையில், ''தூத்துக்குடி - திருச்செந்தூர் சாலையில் தூத்துக்குடியில் இருந்து 17 கி.மீ., தொலைவுக்கு சீரமைக்க ரூ.22.40 கோடிக்கு ஒப்பந்த புள்ளி கோரப்பட்டது. தற்போது ஒப்பந்தப் புள்ளி திறக்கப்பட்டு, சென்னையில் உள்ள ஒப்பந்தப் புள்ளி ஒப்புதல் ஆணையத்துக்கு ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அந்த ஆணையம் 10 நாட்களில் ஒப்புதல் அளிக்கும் என எதிர்பார்க்கிறோம். ஒப்புதல் அளித்ததும் சாலை சீரமைப்பு பணிகள் தொடங்கப்படும்'' என்றார் அவர்.

# அகத்தியா-வில் நல்ல மெசேஜ்: ஜீவா



ஜீவா, அர்ஜுன், ராஷி கன்னா, யோகிபாபு என பலர் நடித்துள்ள படம், 'அகத்தியா'. பா.விஜய் இயக்கியிருக்கும் இந்தப் படம் வரும் 28-ம் தேதி வெளியாகிறது. படம் பற்றி நடிகர் ஜீவா கூறியதாவது: இந்தக் கதையை இயக்குநர் பா. விஜய், சொல்லும் போது அவரிடம், ஏற்கெனவே ஒரு ஹாரர் படத்தில் நடித்து விட்டேன் என்றேன். கதையை முழுவதும் கேட்ட பிறகு இதில் ஹாரர் என்பது, கதை சொல்வதற்காகப் பயன்படும் ஒரு கருவியாக மட்டுமே இருந்தது. அனைவரும் ரசிக்கும் வகையில் 'மிக்ஸ்டு ஜானரி'ல் படத்தை பா.விஜய் உருவாக்கி இருக்கிறார். நல்ல மெசேஜும் இருக்கிறது. அதற்காக ஹாரர், த்ரில்லர், காமெடி, ஆக் ஷன், அனிமேஷன், ஃபேன்டஸி ஆகியவற்றின் கலவையாக, குறிப்பாகக் குழந்தைகளுக்கும் சென்றடைய வேண்டும் என்ற எண்ணத்தில் இந்தப் படம் உருவாகி இருக்கிறது. குழந்தைகள் முதன்முறையாகத் தமிழில் இப்படி ஒரு சர்வதேச தரத்துடன் கூடிய கிராபிக்ஸ் காட்சிகளையும் அனிமேஷன் கதாபாத்திரங்களையும் கண்டு ரசிப்பார்கள். படத்தின் கிளைமாக்ஸ் கிராபிக்ஸுக்கு ஒரு வருடம் காத்திருந்தோம். நடிகர் அர்ஜுன் முக்கியமான வேடத்தில் நடித்திருக்கிறார். இவ்வாறு ஜீவா கூறினார்.

# பிறப்பு சான்றிதழ் மோசடி வழக்கில் லக்சயா சென் மீது நடவடிக்கை எடுக்க தடை




பாட்மிண்டன் வீரர் லக்சயா சென் மீது நடவடிக்கை எடுக்க கர்நாடக போலீஸாருக்கு தடைவிதித்து உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. பாட்மிண்டன் வீரர் லக்சயா சென், பிறந்த தேதியை மாற்றி மோசடி செய்துள்ளார் என்று கூறி கர்நாடகாவைச் சேர்ந்த நாகராஜ் என்பவர் கர்நாடக உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார். அதில், லக்சயா சென் மற்றும் அவரது சகோதரர் சிராக் சென் ஆகியோரின் பெற்றோர் திரேந்திரா, நிர்மலா சென், அவரது சகோதரரும், பயிற்சியாளரும், கர்நாடக பாட்மிண்டன் சங்க ஊழியரும் சம்பந்தப்பட்டுள்ளனர் என்றும், கர்நாடக அரசின் நலத்திட்டங்களைப் பெறுவதற்காகவும், வயதைக் குறைத்து அதற்குரிய போட்டிகளில் பங்கேற்பதற்காகவும் இந்த சான்றிதழ் மோசடியில் ஈடுபட்டுள்ளனர் என்றும் அந்த மனுவில் கூறியிருந்தார். இதை எதிர்த்து கர்நாடக உயர் நீதிமன்றத்தில் லக்சயா சென் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு தள்ளுபடி செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து நாகராஜின் மனுவை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் லக்சயா சென் தாக்கல் செய்த மனு நேற்று நீதிபதிகள் சுதான்ஷு துலியா, கே.வினோத் சந்திரன் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது மனுவை விசாரித்த நீதிபதிகள், இந்த விவகாரத்தில் மனுவைத் தாக்கல் செய்த நாகராஜு, கர்நாடக அரசுக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டனர். மேலும் லக்சயா சென், சிராக் சென் ஆகியோர் மீது மறு உத்தரவு வரும்வரையில் எந்தவித நடவடிக்கையையும் கர்நாடக போலீஸார் எடுக்கக்கூடாது என்றும் நீதிபதிகள் தங்களது உத்தரவில் தெரிவித்துள்ளனர்.

# விடுதலையை விஞ்சுமா-வீரவணக்கம்? டி.எம். சௌந்தராஜன் மகன் அறிமுகம்!



மலையாள சினிமா அளவுக்கு இந்தியாவில் கம்யூனிஸ்ட் தோழர்களின் வாழ்க்கையைப் பேசியதில்லை. தமிழ் சினிமாவை பின்னோக்கித் திரும்பிப் பார்த்தால், கம்யூனிஸ்ட் இயக்கம் குறித்தும், அது தடை செய்யப்பட்டு, தோழர்கள் மீது அடுக்கடுக்காக 'சதி வழக்குகள்' போட்டபட்ட தலைமறைவு காலகட்டம் குறித்து அது பெரிதாக அலட்டிக்கொண்டதில்லை. ஆனால், புலவர் கலியபெருமாளின் வாழ்க்கை, வெற்றிமாறன் இயக்கத்தில் 'விடுதலை'யாக வெளிவந்து தமிழ்ப் பார்வையாளர்களிடம் வரவேற்பைப் பெற்றது. விஜய்சேதுபதியைத் தொடர்ந்து தற்போது சமுத்திரக்கனி காங்கிரஸ் இயக்கத்திலிருந்து வெளியேறி எப்படி கம்யூனிஸ்டாக உருவானார் என்கிற வரலாற்றுப் பின்னணியுடன் வெளியாகவிருக்கும் 'வீரவணக்கம்' படத்தில் முதல்முறையாக தோழர் கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார். இதில் சமுத்திரக்கனியுடன் பரத் முதல் முறையாக இணைகிறார். தமிழ்நாடு மற்றும் கேரளாவின் சகோதரத்துவத்தையும் இதய உறவுகளையும் உறுதிப்படுத்தும் ஓர் அபூர்வ திரைப்படம் 'வீர வணக்கம்' என்று படத்தை எழுதி, இயக்கியிருக்கும் பிரபல மலையாளத் திரைப்பட இயக்குநர் அனில் வி. நாகேந்திரன். இப்படத்தில் பரத் தவிர, சிறந்த நடிகைக்கான தேசிய விருது பெற்ற சுரபி லட்சுமி, ரித்தேஷ், பரணி, ரமேஷ் பிஷாரடி, சித்திக், அரிஸ்டோ சுரேஷ், ஆதர்ஷ், அய்ஸ்விகா, சித்தாங்கனா மற்றும் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட நடிகர்கள் நடித்துள்ளனர். முதலில் விடுதலை போராட்ட வீரன்.. பிறகு சமூக விடுதலைக்கான வீரனாக சமுத்திரக்கனி "இடதுசாரிகளின் வரலாற்றில் புரட்சி பாடகியாக கேரள மக்களால் போற்றப்படும் சுதந்திரப் போராட்ட வீராங்கனை, 95 வயதான பி.கே. மேதினி அம்மாவும் முக்கிய வேடத்தில் நடித்துள்ளார். கேரளாவில் கம்யூனிஸ்ட் கட்சியை நிறுவிய முதல் செயலாளரும், புரட்சி வீருமான பி. கிருஷ்ண பிள்ளை அவர்களின் வீர வாழ்க்கை வரலாறுதான் திரைப்படம். ஜாதி கொடுமைகளுக்கும் அதனுடான கொடூர வன்முறைகளுக்கும் உள்ளாகும் ஒரு தமிழ் கிராமத்தின் விடியல் பயணம் தான் வீரவணக்கம். ஒரு தாய் மக்களான தமிழர்களுக்கும் மலையாளிகளுக்கும் ஒரு புது திரை அனுபவத்தை உறுதியாகத் தரும். " என இயக்குநர் நம்மிடம் தெரிவித்தார். இயக்குநர் அனில் வி. நாகேந்திரன் எழுதி இயக்கிய மலையாள பிளாக் பஸ்டர் திரைப்படமான 'வசந்தத்தின்டே கனல் வழிகளில்' என்கிற காவியத்தின் இரண்டாம் பாகம் தான் இந்த 'வீரவணக்கம்' என்கிற படக்குழு. சிறந்த நடிகருக்கான தேசிய விருது பெற்ற சமுத்திரகனியையும் சிறந்த நடிகைக்கான தேசிய விருது பெற்ற சுரபி லட்சுமியையும் மலையாளத்தில் முதன்முறையாக கதாநாயகன் கதாநாயகியாக அறிமுகம் செய்த படம் தான் 'வசந்தத்தின்டே கனல் வழிகளில்' . சமுத்திரக்கனி மீண்டும் பி.கிருஷ்ணபிள்ளையாக 'வீரவணக்க'த்தில் நடித்திருப்பது கேரள ரசிகர்களிடம் அதிக எதிர்பார்ப்பை உருவாக்கியிருக்கும் நிலையில் தமிழ்ப் பார்வையாளர்கள் சமுத்திரக்கனியை ஒரு கம்யூனிஸ்டாகப் பார்க்கத் தயாராகி வருகிறார்கள். 'கம்யூனிஸ்ட் இயக்கத்துக்கு தடையென்றால் அதன் போராளியும் தடைசெய்யப்பட வேண்டியவன்'இத்திரைப்படத்துக்கு எம் கே அர்ஜுனன், பெரும்பாவூர் ஜி ரவீந்திரநாத், ஜேம்ஸ் வசந்தன், சி.ஜே குட்டப்பன் மற்றும் அஞ்சல் உதயகுமார் என ஐந்து இசையமைப்பாளர்கள் ஐந்து பாடல்களை வழங்கிடிருக்கிறார்கள். 'சிம்மக்குரலோன்' டி. எம். சௌந்தரராஜனின் மகன் டி.எம்.எஸ். செல்வகுமார் முதல் முறையாக திரைப்படப் பின்னணி பாடகராக 'வீர வணக்க'த்தில் அறிமுகமாகிறார். மீண்டும் டி.எம்.எஸ்ஸே பாடி உள்ளாரோ என எண்ணத் தூண்டும் விதமாக படத்தில் இடம்பெற்றுள்ள புரட்சிப் பாடலை அவர் பாடியிருப்பதாக இயக்குநர் கூறுகிறார். 'வீர வணக்க'த்தில் ஆஸ்கார் விருது பெற்ற 'ஆர் ஆர் ஆர்' திரைப்படத்தில் நாட்டு நாட்டு உட்பட 600 பாடல்களுக்கு மேல் பாடிய பாடகர் யாசின் நிசார், கேரளாவின் முன்னணி நாட்டுப்புறப் பாடகர் சி ஜே குட்டப்பன், ரவிசங்கர் மற்றும் சோனியாவும் மற்றப் பாடல்களை பாடியுள்ளனர். 'விடுதலை' திரைப்படம், நிகழ்தலைமுறையிடம் வரலாறு குறித்து உருவாக்கிய ஆவலை, 'வீரவணக்கம்' விஞ்சிச் செல்லுமா என்பதை பொருத்திருந்தான் பார்க்க வேண்டும்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd s treet, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA.V. Cell-94436 99066